செ.வெ.எண்: 12/மே நாள்: 05.05.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 - தேர்தல் பணியில் ஈடுபடும் தேர்தல் அலுவலர்களுக்கான வாக்குச்சாவடிகளைத் தேர்வு செய்ய கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization)**

**மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள், திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் பிரிவில் உள்ள கணினி அறையில் 04.05.2016 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள் (பரமக்குடி, திருவாடானை), திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) ஆகியோர் முன்னிலையில், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், தேர்தல் பணியில் ஈடுபடும் தேர்தல் அலுவலர்களுக்கான வாக்குச்சாவடிகளைத் தேர்வு செய்ய கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization) நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகின்ற மே 16 அன்று சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் வாக்குப்பதிவிற்காக மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 1307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளுக்காக 119 மண்டல அலுவலர்களும், 1,307 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும், 6,347 வாக்குச்சாவடி அலுவலர்களும், தேர்தல் வாக்குப்பதிவு பணிகளுக்காக 10,763 அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடும் தேர்தல் அலுவலர்களுக்கான வாக்குச்சாவடிகளைத் தேர்வு செய்திட மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள் (பரமக்குடி, திருவாடானை), திரு.ரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) ஆகியோர் முன்னிலையில்,கணினி மூலம் குலுக்கல் முறையில் (Computerized Randomization) வாக்குச்சாவடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டது.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (பரமக்குடி) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திரு.காமாட்சி கணேசன், (தேர்தல்) திருமதி.சாந்தா உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**